1970 ஆகஸ்ட் 26]

ஆண்டுகளுக்கு தேவையானல் நீடிக்கலாம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறது. ஆனல் அரசு துறைமுகத்திற்கு இந்த நிலம் தேவை என்று, வெளியேற்றம் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

Sri Kappaleeswarar Temple Tank

* 58 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether a scheme of silt removing was carried out in the Tank of Sri Kapaleeswarar Temple in Mylapore, Madras; and

(b) if so, what was the expenditure involved?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) சென்னை, மயிலையில் உள்ள ஸ்ரீகபாலீஸ்வரர் கோவில் குளத்தில் தூர் எடுக்கும் பணி தொடர்பாக ரூ. 500 செலவிடப் பட்டது.

திரு. கே. விஞயகம் : சார், இந்த கபாலீஸ்வரர் கோவில் குளத்தை ஆழம் செய்தபோது, மாண்புமிகு முதல் அமைச்சரும் சேர்ந்து கொண்டு கையில் மம்மட்டியும், கட்டபபாரையும் பிடித்து, மண் எடுக்கும் போது, ஒரு பொருள் கிடைத்ததாமே, ஒரு புதை பொருள். அது யாரைச் சேர்ந்தது? யார் எடுத்துக் கொண்டார் கள் ? கோவிலில் கொடுத்தார்களா ? என்ன பொருள் இருந்தது, அது என்னவாயிற்று? அதை விளக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு சிறிய உண்டியல், புதுக் காசுகளோடு இருந்தது, யாரிடமும் கொடுக்கப்படவில்லை. விஞயகர் கோவிலுக்குத் தருவதாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 59 ஒற்றி வைக்கப்படுகிறது.

பழங்காநத்தம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை

*60 விஞ.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட விஞக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தத்திலுள்ள E. S. I. மருத்துவமனை எந்தத் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது?

(இ) அந்த மருத்துவமனைக்குத் திறப்பு விழா எப்போது நடைபெற்றது?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் பழங்காநத்தத்தில் தனிப்பட்டவர்க்குச் சொந்தமான ஒரு வாடகைக் கட்டிடத்தில் 28–10–1956 முதல் செயல் படத் தொடங்கியது. அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் 12-2-1966 முதல் செயல்படத் தொடங்கியது.

(இ) இப் புதிய மருந்தகத்தைத் திறப்பதற்கென விழா ஏதும் நடத்தப்படவில்லை. பழங்காநத்தம், பொன்னகரம், திருநகர், முனிச்சாலைரோடு, பாவை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல